கனடாச் செய்திகள்

# கடந்த ஆண்டில் மருத்துவ உதவிக்காகக் காத்திருந்த இருபதினாயிரம் கனடியர் மரணம்!



மருத்துவ உதவிக்காகக் காத்திருந்த கனடியர்கள் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கடந்த ஆண்டு மரணமடைந்தனர் என புதிய அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

கனடாவில் அதிகரித்து வரும் மருத்துவ உதவிக்காகக் காத்திருந்த கனடியர்கள் மரணங்கள் குறித்து ஒரு இந்த புதிய அறிக்கை எச்சரிக்கையை இது ஏற்படுத்தியிருக்கின்றது.

பொதுக் கொள்கை சிந்தனைக் குழுவான SecondStreet.org என்ற அமைப்பு இந்த அறிக்கையை வெளியிட்டது.

ஏப்ரில் 2024 முதல் மார்ச் 2025 வரை கனடாவில் அறுவை சிகிச்சை-கள், நோயறிதல் நடைமுறைகளுக்காகக் காத்திருந்தபோது குறைந்தது 23,746 நோயாளிகள் இறந்துள்ளனர் என அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

இந்த எண்ணிக்கை முந்தைய ஆண்டை விட மூன்று சதவீதம் அதிகமானதாகும்.

மேலும் 2018 முதல் பதிவான மருத்துவ உதவிக்காகக் காத்திருந்த கனடியர்களின் மொத்த எண்ணிக்கையைவிட இது 100,000-க்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

40-க்கும் மேற்பட்ட மாகாண, பிராந்திய சுகாதார அமைப்புகளுக்கு அனுப்பப்பட்ட தகவல் சுதந்திர ( Freedom of information - FOI)கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த தரவுகள் கிடைத்துள்ளதாக இந்த அமைப்பு கூறுகின்றது.

இது முழுமையான தரவு அல்ல என்றும் பல பகுதிகளின் தரவுகள் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் இந்த அமைப்பு மேலும் தெரிவிக்கின்றது. அல்பேட்டா, மொனிடோபா மாகாணத் -தின் சில பகுதிகள் எந்த தரவுகளையும் வழங்கவில்லை என்பதையும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இதனால் உண்மையான மொத்த மரணங்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என எச்சரிக்கப்படுகிறது. ஒன்றாரியோவில் அதிக எண்ணிக்கையிலான மருத்துவ உதவிக்காகக் காத்திருந்த கனடியர்கலின் மரணங்கள் பதிவாகியுள்ளன.

ஒன்றாரியோ 10,634, கியூபெக் 6,290, பிரிடிஷ் கொலம்பியா 4,620 என முதல் மூன்று மாகாணங்களாக மரணங்களின் எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

LJI Reporter - சுசி பாலசிங்கம்

# மத்திய வருமான வரி வரம்புகளில் புதிய ஆண்டில் மாற்றங்கள் முன்மொழிவு




வருமானம் குறைந்தோரின் வரிச்சுமைகளைக் குறைக்கும் நோக்கத்துடன் புதிய ஆண்டில் வரி வரம்புகளில் மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

முன்மொழியப்பட்ட மாற்றங்கள் கன-டாவின் மிகக் குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் 2026-ஆம் ஆண்டு முதல் சற்று குறைவான வருமான வரியைச் செலுத்த கூடிய சாத்தியக்கூற்றைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த கோடைகாலத்திற்கு முன்னர் மத்திய அரசால் சில வருமான வரி குறைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மார்க் கார்னி அரசின் 'நடுத்தர வர்க்க வரி குறைப்பு", மிகக் குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் வருமான வரியை 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக குறைக்கும் திட்டத்தை முன்மொழிந்திருக்கி-ன்றது. இந்த முன்மொழிவுகள் நாடாளுமன்றத்தில் சட்டமாக மாற்றப்பட்டதன் பின்னரே நடைமுறைக்கு வரும்.

LJI Reporter - சுசி பாலசிங்கம்


# மார்க்கம் நகரில் இல்லங்களில் நுழைந்ததாக சந்தேக நபர் மீது குற்றம் சாட்டப்பட்டது!

மார்க்கம் நகரில் இல்லங்களில் நுழைந்ததாக சந்தேக நபர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

யோர்க்(York) பிராந்திய காவல்துறையின் குற்றப் புலனாய்வு பணியகத்தின் புலனாய்வாளர்கள் தமிழரான ஒரு சந்தேக நபர் மீது இதில் குற்றச்சாட்டுகளை பதிவு செய்துள்ளனர்.

கைதானவர் மார்க்கம் நகரை சேர்ந்த 36 வயதான நிஷாந்த் செல்வரட்னம் (Nishanth Selvaratnam, 36)என தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர், 18 காலை (பழைய கென் -னடி வீதி - ஸ்டீல்ஸ் அவென்யூ கிழக்கு (Old Kennedy Road and Steeles Ave-nue East )பகுதியில் இல்லத்திற்குள்



ஒருவர் நுழைந்ததாக கிடைத்த புகாரின் பேரில் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

பூட்டப்படாத கதவு வழியாக சந்தேக நபர் வீட்டிற்குள் நுழைந்தார் எனவும் வீட்டு உரிமையாளரை எதிர்கொண்டபோது அவர் பயந்து ஓடிவிட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர் அப்பகுதியில் உள்ள குறைந்தது மேலும் இரண்டு வீடுகளுக்குள் நுழைய முயன்று தோல்வியடைந்ததை காவல்துறையினர் அறிந்தனர்.

பின்னர் சந்தேக நபர் நவம்பர் 26, 2025 அன்று கைது செய்யப்பட்டு இதுவரை நான்கு குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் நடந்த நேரத்தில், நிஷாந்த் செல்வரட்னம் வேறு குற்றங்களுக்காக நன்னடத்தை பிணையயில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அவரால் மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என புலனாய்வாளர்கள் நம்புவதால், யோர்க் பிராந்திய காவல்துறை சந்தேக நபரின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.


இவரால் வேறு எவரும் பாதிக்கப்பட்டிருந்தால் தம்மை தொடர்பு கொள்ளுமாறு காவல்துறையினர் கோரியுள்ள-னர்.

இந்த சம்பவம் குறித்த விசாரணை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், கூடுதல் குற்றச்சாட்டுகளை சும -த்த புலனாய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் இதுவரை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை.

LJI Reporter - சுசி பாலசிங்கம்

# அல்பேட்டாவுடனான எண்ணெய் குழாய்த் திட்ட ஒப்பந்தத்தை மீளப்பெறுமாறு முதற்குடிகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது



புதிய எரிசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கனடிய மத்திய அரசாங்கமும்அல்பேட்டா மாகாண அரசும் கடந்த வாரம் நவம்பர் 27 அன்று கையெழுத்திட்டன.

இந்த புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் பிரிடிஷ் கொலம்பியா வழியான எண்ணெய் குழாய் திட்ட பாதைக்கு வழி வகுக்கிறது. இத்திட்டமானது பழங்குடி மக்களின் இயல்பு வாழ்வுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் எதிரானது என முதற்குடிகள் சபை கருதுகின்றது. இந்த ஒப்பந்தம் திரும்பப் பெறக் கோரி முதற்குடிகளின் தலைவர்கள் சபை கூடிய கூட்டத்தில் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது.

அதேவேளை எண்ணெய் குழாய் திட்ட முயற்சி -யை கடுமையாக எதிர்க்கும் பிரிடிஷ் கொலம்பியா அரசுக்கு முழு ஆதரவையும் முதற்குடிகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த வாரம் நூற்றுக்கணக்கான முதற்குடிகளின் தலைவர்கள் தலைநகர் ஒட்டாவாவில்வில் வருடாந்த கூட்டத்திற்காக சந்தித்திருந்தனர்.

எண்ணெய் குழாய்த் திட்டப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்த சந்திப்பின் நிகழ்ச்சிநிரலில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பிரதமர் மார்க் கார்னி உரையாற்றினார்.

பின்னர் கேள்வி நேரத்தில் பிரதமரிடம் முதற்குடிகள் தலைவர்கள் பலரும் கடுமையான கேள்விகளை முன்வைத்தனர்.

கடந்த யுசபை மாதம் சிறுபான்மை அரசாங்கத்தை வெற்றி பெற்ற பின்னர் பிரதமர் மார்க் கார்னி முதற்குடிகள் தலைவர்கள் சபை மாநாட்டில் கலந்து கொள்வது இதுவே முதல் முறையாகும்.

LJI Reporter - சுசி பாலசிங்கம்

LJI Reporter - சுசி பாலசிங்கம்